கருக்கம்

நிலம் – வீட்டுமனை ஒப்படை – அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புக்களை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம் – குடியிருப்பு கால வரம்பை மூன்று ஆண்டுகளாக குறைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [நிமு.1(2)] துறை

அரசாணை (நிலை) எண்: 43 நாள்: 29.1.2010

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854, வருவாய்த்துறை, நாள். 30.12.2006.
2. அரசாணை (நிலை) எண். 498, வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711, வருவாய்த்துறை, நாள் 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34, வருவாய்த்துறை, நாள் 23.1.2008.
5. அரசாணை (நிலை) எண் 241, வருவாய்த்துறை, நாள் 9.5.2008.
6. அரசாணை (நிலை) எண் 579, வருவாய்த்துறை, நாள் 3.10.2008.
7. அரசாணை (நிலை) எண்.366, வருவாய்த்துறை, நாள் 8.10.2009.
8. மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் (கண்காணிப்பு) அவர்களின் நேர்முகக் கடித எண்.41/மு.அ.அ (கண்காணிப்பு பிரிவு)/2010 நாள் 06.01.2010.

****

ஆணை

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் அரசால் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு திட்டத்தின் கீழ், கோவில் புறம்போக்கு நிலங்கள், திருச்சபை மற்றும் மசூதி போன்ற வழிபாட்டு தலங்களை சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களை தவிர பிற அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளை புலத்தணிக்கை செய்து, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில், வீட்டுமனை பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டில் இருந்த பல தடையாணைகள் தளர்வு செய்யப்பட்டன.

2. மேலே 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தெளிவுரைகள் வழங்கப்பட்டன.

3. மேலே 4–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் இத்திட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இச்சிறப்புத்திட்டம் 30.9.2010 வரை நீட்டித்து மேலே 7-இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த சென்னை உயர்நீதிமன்றத்தால் தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உயர்நீதிமன்ற தடையாணைக்குட்பட்ட நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நில வகைகள் தவிர்த்து ஏனைய அரசு நிலங்களில் குடியிருப்பு வீடுகட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனவற்றை மட்டும், இத்திட்ட செயல்முறை குறித்து அரசு வெளியிட்டுள்ள ஆணைகளில் கண்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி வரன்முறை செய்ய அரசு தெளிவுரை வழங்குகிறது.

6. அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு அவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்ய நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான குறைந்தபட்சம் வீடுகட்டி 5 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஆய்வு செய்த அரசு இந்த குறைந்தபட்ச குடியிருப்புக்கால வரம்பை மூன்று ஆண்டுகளாக குறைத்து ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணைப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி.தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை செயலாளர் மற்றம் நில நிர்வாக ஆணையர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:
அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்(கண்காணிப்பு), சென்னை-9.
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய்த்துறை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை-9
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Verified by RedEstore